[1981 ஏப்ரல் 27

கொல்லங்கோவில் கிராமத்தில் புதிய குளம் வெட்டும் திட்டம்

* 904 வினா.—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சித் தொகுதியில் கொல்லங் கோவில் கிராமத்தில் புதிய குளம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்படுமா ?

(இ) அதற்கு ஒதுக்கப்படும் நிதி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இக்குட்டை கட்டும் திட்டம் ரூபாய் 1.36 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு சிறுபாசன தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கும் உதவித் தொகை

* 905 வினா.—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). (ஸ்காலர்ஷிப்) உதவித் தொகை பெறும் மாணவர்கள் பள்ளி நாட்களில் 90 சதவிகிதம் ஆஜராகி இருக்க வேண்டுமென்ற உத்தரவு இருப்பதால், தாழ்த்தப்பட்ட பல மாணவர்கள் உதவித்தொகை பெற இயலாத நிலையை அரசு அறியுமா ?

(ஆ) எனவே 90 சதவிகிதம் என்றிருப்பதை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை வாங்கக் கூடிய மாணவர்களுக்கு 90 சதவிகிதம் அட்டன்டென்ஸ் இருக்க வேண்டுமென்று சொல்வதால், சில நேரங்களில் உடல்நிலை பாதிக்கப்பட்டு, மருத்துவ மனைகளில் சேர்க்கப்படும்போதும் 90 சதவிகிதம் அட்டன்டென்ஸ் வர முடியாத நிலைமையிருக்கிறது. ஏற்கனவே 75 சதவிகிதம் அட்டன்டென்ஸ் இருந்தால், யுனிவர்சிட்டித் தேர்வு எழுத கன்டொனேஷனுக்கு அப்ளை பண்ணலாம். அந்தச் சலுகை இதற்கும் நீடிக்கப்பட்டு, கன்டொனேஷன் கொடுக்கப்படுமா ? அரசு அதைப் பரிசீலிக்குமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1980-81 ஆம் கல்வி ஆண்டைப் பொறுத்தவரையில் மட்டும், சிறப்பு அம்சமாக, இந்த விதியை அரசு தளர்த்தியுள்ளது. வருகிற ஆண்டுகளில் மத்திய அரசு உதவித் தொகை பெறுகிற ஆதி திராவிட மாணவர்களையும் கருத்திலே கொண்டு 90 சதவிகிதம் வருகை சம்பந்தமான விதியை நிரந்தரமாக வைத்துக் கொள்வதா அல்லது நீக்குவதா அல்லது 90 சதவிகிதம் என்று இருப்பதை 75 சதவிகிதமாகக் குறைப்பதா என்பதைப்பற்றி மத்திய அரசின் கருத்தை அறிந்த பிறகு அதுபற்றி ஒரு முடிவை எடுக்க இயலும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்காலர்ஷிப் கொடுப்பது சம்பந்தமாக, ஆஸ்டலில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு வருகை என்பது நீங்கள் அறிவித்தபடி இருக்க முடியும். ஆனால், வெளியிலிருந்து, பல கிராமங்களிலிருந்து வரக்கூடிய மாணவர்கள், நீண்ட நெடும் தொலைவிலிருந்து வருகிற காரணத்தால், உடல் நிலைக் கோளாறு ஏற்படுகிறது. அதே போல், சைக்கிளில் வரக்கூடிய நேரத்தில், பங்க்சர் ஏற்பட்டு, மாணவர்கள் பள்ளிக்கு வர முடியாத சூழ்நிலை இருப்பதாலும், அட்டன்டென்ஸ் 90 சதவிகிதம் என்று இருப்பதை மாற்றி, அவர்கள் பள்ளி சேர்ந்த தேதியிலிருந்து அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு, இந்த அளவுகோலை மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே விடை அளிக்கின்றபோது பதில் அளித்திருக்கிறேன். இதைக் குறித்துதான், இத்தகைய இன்னல்கள் இருப்பதை அறிந்துதான் வருகின்ற ஆண்டுகளில் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஒரு குடும்பத்தில் இரண்டு பேர்களுக்கு மேல் படித்தால் அதற்கு மேல் படிக்கின்றவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடையாது. இந்த விதியில் இருந்து பெண் மாணவிகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மத்திய அரசாங்கத்தின் உத்தரவு அமல்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? மாணவர்களின் நலனைக் கருதி, அந்த உத்தரவை அமல்படுத்துவதற்கு அரசு உடனடியாக ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, தற்போது அதுபற்றித் தகவல் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.